**தலைப்பு 247 – இலங்கை சுங்கம்**
**---------------------------------**------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுங்கத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை சுங்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை சுங்கத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3(அ) பந்தியில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் குறிப்பிட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

**(அ) நிலுவை வருமானம்**

இலங்கை சுங்கத்தின் நிலுவை வருமானம் கணக்கிடப்படும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருமானக் குறியீட்டு இல 9 இன் நிலுவை வருமானம் 2019 திசெம்பர் 31 இற்கு மீதிகள் மற்றும் 2020 சனவரி 01 இற்கு மீதிகளின் இடையில் ரூபா 43,355,433,032 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இற்கு காணப்பட்ட மீதிக்கு சதவீதமாக 258 சதவீதம் ஆன திருத்தம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். அரச கணக்குகள் திணைக்களத்தினால் 2020 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலுவை வருமான அறிக்கை அறிக்கையிடும் மாதிரி ACA 1(i) பிராகாம் வருட ஆரம்ப நிலுவை வருமானம், ஆண்டினுள் அறிக்கையிடப்பட்ட நிலுவை வருமானம், ஆண்டினுள் அறவிடப்பட்ட நிலுவை வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் மீதி காண்பிப்பதற்காக நெடுவரிசை அறிமுகப்படுத்தி கொடுக்கப்படினும் கடந்த ஆண்டிற்கு தொடர்பாக நிலுவை வருமானம் அல்லது வேறு பெறுமதிகள் சீராக்கப்படுவதற்காக வசதியளிக்கப்பட்டில்லை. எவ்வாறாயினும், நிலுவை வரி அறவிடப்படுவதற்கு தொடர்புடைய அறிக்கைகள் பேணிச் செல்லும் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினால் 2019 திசெம்பர் 31 இற்கு அறவிடப்பட வேண்டுமென அறிக்கையிடப்பட்டிருந்த பெறுமதியும் சரியானதல்ல. அது மேற்படி மாதிரி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட வேண்டுமென 2020 ஆம் ஆண்டினுள் அடையாளம் காணப்பட்டிருந்தது. எனவே, இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட நிலுவை வரிப்பணம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி தயாரிக்கப்பட்ட விதம் காண்பிக்கப்படும் இணக்கக்கூற்று ''பின்னிணைப்பு | நிலுவை வருமானம் சரியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

1" ஆக முன்வைக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மூலதன செலவினம்**

நிதிக் கூற்றுக்களுக்கு தொடர்புடைய மூலதன செலவினம் கணக்கிடப்படும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | செலவு நாளேட்டின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இற்கு நிலையான சொத்துக்கள் கொள்வனவுகளுக்கு தொடர்புடைய மொத்த செலவினம் ரூபா 22,826,946 ஆக காணப்படினும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 24,492,302 என காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 1,665,356 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2020.12.31 இற்கு செலவு நாளேட்டின் பிரகாரம் 2103 செலவு விடயத்தின் கீழ் மொத்த செலவினம் ரூபா 24,785,470 ஆகும். நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட செலவினம் ரூபா 24,492,302 ஆகும். அதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 1,706,832 ஆகும். ஹம்பந்தோட்டை துறைமுகம் சுங்க உத்தியோகத்தர்களின் 4 தங்குமிடங்களுக்காக காற்றுபதனாக்கம் பொருத்துவதற்காக இந்த செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் ஹம்பந்தோட்டை மாவட்ட செயலாளர் அலுவலகத்தினால் 2020 திசெம்பர் மாத கணக்கு பொழிப்பறிக்கை ஊடாக அச் செலவினம் அறிக்கையிடப்பட்டுள்ளது. | சரியாக தகவல்கள் கணக்குகளில் அறிக்கையிடப்படல் வேண்டும். |
| (ii) | வருடாந்த நிதி கூற்றுக்களுடன் கூடிய நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் திறைச்சேரி கணினி அச்சு பிரகாரம் மீளாய்வாண்டினுள் கொள்வனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 32,254,378 ஆக காணப்படினும் செலவு நாளேட்டின் பிரகாரம் அது ரூபா 40,461,613 ஆகியமையினால் ரூபா 8,207,235 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்து கொள்வனவின் கீழ் உட்படுவது செலவு விடயம் 2102 மற்றும் 2103 இன் கீழ் ஏற்கப்படுகின்ற செலவுகளாகும். கணக்காய்வின் கணக்கீட்டிற்காக 2401 (பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி) செலவு விடயம் மற்றும் 2002 (இயந்திர உபகரண மேம்பாடு) செலவு விடயத்தின் கீழ் ஏற்கப்பட்ட செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் 2102 மற்றும் 2103 செலவு விடயத்தின் கீழ் மொத்த செலவினம் ரூபா 32,263,278 ஆக காணப்படுவதுடன் நிதியல்லாச் சொத்து தொடர்பான கூற்று பிரகாரம் மீளாய்வாண்டினுள் கொள்வனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 32,254,378 ஆகும். அதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 8,900 ஆகும். CIGAS நிலையான சொத்து பதிவீட்டின் பிரகாரம் 2020.11.18 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,900 பெறுமதியான அரைக்கும் இயந்திரம் (Blender) மின் சாதனங்களின் கீழான முழு கூட்டுத்தொகை உள்ளடக்கப்பட்டிராமை காரணத்தினால் இந்த வித்தியாசம் காண்பிக்கப்பட்டிருந்தது. அது CIGAS நிகழ்ச்சித் திட்டத்தின் தொழிநுட்ப | திறைச்சேரியுடன் கலந்துரையாடி சரி செய்வதற்கு தொடர்புடைய சீராக்கல் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறைப்பாட்டினால் ஏற்பட்டிருந்ததுடன் அரச கணக்குகள் திணைக்களத்ததுடன் கலந்துரையாடப்பட்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| **(iii)** | 2102 ஆம் இலக்க அலுவலக உபகரணங்கள் செலவின நாளேடான 2102 இன் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 22,473,930 பெறுமதியுடைய அலுவலக உபகரண இல 2103 இலக்க பொறி மற்றும் இயந்திர உபகரண மீதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. | வவுசர்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் போது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தொடர்புடைய செலவு விடயங்களுக்கு செலவு வைத்தல் மேற்கொள்ளப்படுகின்றதுடன் கணக்காய்வினால் தொடர்புடைய தகவல்கள் பெற்றுக் கொடுப்பதென்றால் மீள பரிசோதிக்கப்பட்டு பதில் பெற்றுக் கொடுக்க கூடும். | சரியான செலவு விடயங்களில் செலவு குறிப்பிடப்படல் வேண்டும். |
| **(iv)** | 2020 திசெம்பர் 31 இற்கு 2002 ஆம் செலவு விடயம் நிலையான சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செய்தல் செலவு விடயத்தின் கீழான முழு செலவினம் ரூபா 2,292,598 ஆக காணப்படினும் அது நிதிக் கூற்றுக்களுடனான ஏசீஏ 2(1) கூற்றில் ரூபா 3,712,414 என குறிப்பிடப்பட்டிருத்தல் காரணத்தினால் ரூபா 1,419,816 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | 2020.12.31 இற்கு 2002 செலவு விடயத்தின் கீழ் ஏற்கற்கப்பட்ட செலவினம் ரூபா 3,712,414 ஆகும். அப் பெறுமதி செலவு நாளேட்டில் போன்று நிதிக் கூற்றுக்களிலேயும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வித்தியாசம் காணப்படவில்லை. | செலவு நாளேடு மற்றும் நிதிக் கூற்று தகவல்கள் சரியானதாக காணப்படல் வேண்டும். |

### 1.6.2 வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள்

நிதிக் கூற்றுக்களுக்கு தொடர்புடைய வைப்பு செலுத்தல்கள் மற்றும் மீதி கணக்கிடப்படும் போது பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | ----------------------------------------- | ----------- |
| **(அ)** | 2019 திசெம்பர் 31 இற்கு வைப்பு கணக்குகளுக்கு தொடர்புடையதாக முன்வைக்கப்பட்டிருந்த ஏசீஏ 4 கூற்றின் பிரகாரம் காணப்பட்ட மீதிகள் மற்றும் 2020 ஆம் ஆண்டிற்காக முன்வைக்கப்பட்டிருந்த ஏசீஏ 4 கூற்றில் | 2019 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கும் போது அடிப்படையாகக் கொண்டிருப்பது இருப்பது திறைச்சேரி அச்சு பிரகாரம் மீதியாவதுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிக்கம் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டது திணைக்கள நாளேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளாகும். அதன் பிரகாரம் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. | நீண்ட காலமாக கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற இந்த வித்தியாசம் அடையாளப்படுத்தப்பட்டு தீர்க்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட ஆரம்ப மீதி இடையில் ரூபா 101,917,351 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | எவ்வாறாயினும் இது பல ஆண்டுகளிலிருந்து ஆரம்ப மீதியில் காணப்பட்டு வருகின்ற வித்தியாசமாகும். | |
| **(ஆ)** | வைப்பு கணக்குகளுக்கு தொடர்புடையதாக திறைச்சேரி அச்சி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு மற்றும் வரவு வைத்தல்கள் திணைக்கள புத்தகங்களுடன் ஒப்பிடும் போது முறையாக ரூபா 30,755,216 ஆன வித்தியாசம் மற்றும் ரூபா 1,537,785 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | செலவு வைத்தல் வித்தியாசத்திற்கு காரணம்<br>----------------------------------------------<br>(i) ரூபா 1,537,785 ஆன பணம் விமாத்தின் ஊடாக கொண்டு வரப்படுகின்ற பொருட்களுக்காக அறவிடப்படுகின்ற வைப்பு (6000/0000/00/0001/0035/000) 18/128 ஆம் இலக்க கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்கும் போது தவறுதலாக 1/35 கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள இந்த பெறுமதி 2020 திசெம்பர் மாதத்தில் J/20/12/12X நாளேட்டின் ஊடாக சரி செய்யப்பட்டதினால் இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது.<br>(ii) ரூபா 481,876 ஆன பணம் டென்டர் வைப்பு கணக்கிற்கு (6000/0000/02/0186/000) 2020 மே மற்றும் செப்தெம்பர் மாதங்களில் தவறுதலாக செலவு வைக்கப்பட்டிருந்த தொகையாகும்.<br>(iii) சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு (6000/0000/00/0006/0062/000) திணைக்கள புத்தகத்தின் பிரகாரம் செலவு வைத்தல் கூட்டுத்தொகை ரூபா 1,297,069,865 என திருத்தப்பட வேண்டியதுடன் வித்தியாசம் ரூபா 28,735,576 என திருத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி வரவு வைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாளேட்டு குறிப்புக்கள் மற்றும் கடந்த ஆண்டின் தவறு திருத்தலுக்கான நாளேட்டு குறிப்பினால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.<br>வரவு வைத்தலுக்கான வித்தியாசத்திற்கான காரணங்கள்<br>----------------------------------------------<br>ரூபா 1,537,785 ஆன பணம் விமானத்தின் ஊடாக கொண்டு வரப்படும் பொருட்களுக்காக அறவிடப்படுகின்ற வைப்பு (6000/0000/00/0001/0035/000) 18/128 ஆம் இலக்க கணக்கிற்கு வரவு | திறைச்சேரி குறிப்புக்களின் தரவு மற்றும் திணைக்கள புத்தகங்களின் தரவு இடையில் இணங்கும் வகையில் கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வைக்கப்பட வேண்டிய போதிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்சேர்க்கும் போது தவறுதலாக 1/35 கணக்கிற்கு வரவு வைத்தல் மீது இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | |
| **(இ)** 2020 திசெம்பர் 31 இற்கு வைப்பு கணக்குகளுக்கு தொடர்புடையதாக திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் மற்றும் திறைச்சேரி கணினி அச்சு குறிப்புக்களில் காணப்பட்ட 04 கணக்கு மீதிகளில் ரூபா 93,229,983 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அவ் வித்தியாசங்களுக்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டு இணக்க கூற்றொன்று கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | 18/128 கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு தவறுதலாக 1/35 கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள இந்த பெறுமதி 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் J/20/12/12X நாளேட்டின் ஊடாக திருத்திமையினால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. | வித்தியாசங்கள் அடையாளப்படுத்தப்பட்டு குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலையொன்று ஏற்படுவதை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்தின் 2399 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், கூலி, மேலதிக நேர வேலை, விடுமுறை தினச் சம்பளம், ஊக்குவிப்பு படி என்பனவாக அரசாங்கத்தின் திரண்ட நிதியிலிருந்து ரூபா 1,925,498,453 தொகையும் சுங்க மேலதிக நேர வேலை, கப்பல் சரக்குகளைப் பரீட்சித்தல் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,014,489,891 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 2,939,988,344 தொகையான செலவுகள் சம்பந்தமாக உறுதிப்படுத்துவதற்கான சான்றாக சேவைக்கு சமுகமளித்தமையை | பிரதான அலுவலகம், மாகாண அலுவலகங்கள், துறைமுகம் மற்றும் விமான நிலையங்களில் தொடர்புடைய பிரிவிற்கான மேற்பார்வை உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் அடிப்படையில் மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், விரல் அடையாளமிடும் இயந்திரம் தொடர்பான அறிக்கையொன்று 2021.04.06 ஆம் திகதி நடத்தப்பட்ட அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுவிற்கு (COPA) முன்வைக்கப்பட்டுள்ளது. | (i) அரசாங்கத்தின் பொதுவான பணிப்புரை மற்றும் அரசாங்க கணக்குகள் தொடர்பான செயற்குழுவின் பணிப்புரையை கடுமையாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.<br>(ii) நிதி ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையில் மற்றும் நிதிப் பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.<br>(iii) ஊழியர் முகாமைத்துவம் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துகின்ற விரல் அடையாளமிடல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | உள்ளகக் கட்டுப்பாட்டை முறைமைப் படுத்துதல். |
| (ஆ) | இலங்கை சுங்கத்தினால் தேவையை விஞ்சி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 1939 காலணி ஜோடிகளுக்காக ரூபா 6,357,982 தொகையும், 3412 மேஸ் ஜோடிகளுக்காக ரூபா 853,000 தொகையுமாக கூட்டுத்தொகை ரூபா 7,210,982 அரச நிதியங்களிலிருந்து செலவிடப்பட்டிருப்பினும் இக் காலணிகள் மற்றும் மேஸ்கள் களஞ்சியசாலைக்கு பெறப்பட்டமை அல்லது களஞ்சியசாலையிலிருந்து வழங்கப்பட்டமைக்கு தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எனது ESD/GE/03/01/2021 இலக்க மற்றும் 2021.05.04 திகதிய கணக்காய்வு ஐயவியாவின் 03 (இ), (ஈ) மற்றும் 03 , காலணி மற்றும் மேஸ் வழங்கப்படுவதற்கு தொடர்புடைய களஞ்சிய நடைமுறை ஊடாக அது தொடர்பாக பதில் வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி பிரகாரம் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படும் வகையில் கொள்வனவு மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் கேள்வி கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியை மதிப்பீடு செய்த முறைமையைக் காட்டும் எழுத்து மூல சான்றுகள் எதுவும் உரிய பிரிவில் இருக்கவில்லை. அதற்கிணங்க உரிய வரிப் பணம் சரியாகக் கணிக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிக்க முடியாதுள்ளது. | மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் கேள்வி கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியைத் தீர்மானித்தலானது சுங்க விலை பரீட்சை பிரிவினாலாகும். விலை பரீட்சை பிரிவின் மதிப்பீட்டாளர்களின் பரிசோதனைக்காக பொருட்கள் சமர்ப்பித்தல் மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படபடுகின்றதுடன் , சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவ் விலை குறிக்கப்பட்ட விதம் தொடர்பான தகவல்கள் யாவும் விலை பரீட்சை பிரிவிடம் காண்பிடுகின்றது. ஒவ்வொரு உறுப்படிகளுக்காகவும் குறித்த விலை நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் முத்திரை செய்யப்படுகின்ற சுங்க மதிப்பீட்டு அறிக்கை டென்டர் குழுவிற்கு முன்வைப்பதற்காக மத்திய கைதவிர்ப்பு பிரிவிற்கு சமர்ப்பித்தல் விலை பரீட்சை பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>சுங்க டென்டரின் போது குறித்த உறுப்படிகள் வழங்கப்படுவது, | திணைக்கள கட்டளை 790 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சுங்க மதிப்பீடு பெறுமதி விஞ்சி உயர்ந்தபட்ச விலைமனு முன்வைக்கப்படுகின்ற வாங்குபவருக்கு என்பதனால், அரசிற்கு அறவிடப்பட வேண்டிய வரிப்பணம் கணக்கிடல் மேற்கொள்ளப்படுவதாவது சுங்க மதிப்பீடு பெறுமதி மீது அல்லாது, குறித்த ஏலதாரரினால் முன்வைக்கப்படுகின்ற விலைகளின் அடிப்படையிலாகும். அவ்வாறெனில், டெண்டர் வழங்கும் பணிக்காக உயந்தபட்ச ஏலதாரர் தெரிவு செய்யும் பணிக்காக அன்றி வரிப்பணம் கணிக்கப்படுவதற்காக சுங்க மதிப்பீட்டு விலை கருத்திற் கொள்ளப்படாது என மேலதிகமாக குறிப்பிடுகின்றேன்.<br><br>ஏலாதாரர்களினால் ஒவ்வொரு உறுப்படிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைகள், உறுப்படி வழங்கப்பட்ட விலை, அதற்குரிதாக அறவிடப்பட்ட வரிப் பணத்தின் அளவு போன்ற அறிக்கைகள் அனைத்தும் மத்திய கைதவிர்ப்பு பிரிவிடம் காணப்பட்டது. | |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் காசாக ரூபா 20,321,912 தொகையும், பிழை திருத்தங்களாக ரூபா 94,819,272 தொகையும், வருமானத்திலிருந்து மீள செலுத்தல்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருப்பினும் அக் கொடுப்பனவு சான்றுப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை . | வருமானத்திலிருந்து மீள செலுத்தும் பதிவேடு மற்றும் பிழை திருத்தங்களுக்கு தொடர்புடைய நாளேட்டு குறிப்பு பதிவேடு பேணிச் செல்லப்படுகின்றதுடன் கணக்காள்விற்கு முன்வைக்கப்படக் கூடும். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் கொடுப்பனவு சான்றுப்படுத்துவதற்காக தேவைப்படுகின்ற சான்றுகள் முறையாக கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2005 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட வரியைச் செலுத்தி வங்கிப் பிணையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 5,561,829 காணப்பட்டதுடன் அக்காலப்பகுதியில் வங்கிப் பிணையின் அடிப்படையில் பொருட்களை விடுவிப்பதற்கு பதிவு செய்து கொண்ட | தற்போது அலுவலகத்தில் காணப்படுகின்ற அறிக்கைகளின் பிரகாரம் 2005 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக செல்லுப்படியாகும் 02 வங்கி பிணைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டிற்கு தொடர்புடையதாக செல்லுப்படியாகும் 02 வங்கிப் பிணைகள் காணப்பட்டன. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள 2005/66 ஆம் இலக்க வங்கி பிணைக்காக தற்போது உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று காணப்படுகின்றதுடன், 2007/66 I | வங்கி பிணைகள் பெற்றுக் கொள்ளும் மற்றும் விடுவிக்கும் போது உரிய கவனம் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள எண்ணிக்கையும் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலக்க மற்றும் 2007/66 ii இலக்க பிணைகளுக்காகவும் உச்ச நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 68/2016 ஆம் இலக்க விண்ணப்பத்தின் கீழ் வழக்குகள் காணப்படுகின்றன. | |
| (ஊ) | 2015 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 யூன் 30 ஆந் திகதி வரையான 4 ½ ஆண்டுகள் காலத்திற்கு இலங்கை சுங்கத்தின் சுங்க புலனாய்வினூடாக ரூபா 33,845,962,239 தொகையான ஒட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் உள்ளடக்கப்பட்ட தண்டப்பண வருமானம், விற்பனை வருமானம், பறிமுதல் செய்தல் வருமானம் அல்லது சுங்கத் தீர்வைகள் மற்றும் ஏனைய வருமானங்களைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பொருட்களின் பெறுமதி, அப்பொருட்களின் பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்ட முறைமையும் இழக்கப்பட்ட சுங்கத்தீர்வை வருமானமும் முதலியவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் இலங்கைச் சுங்கத்தின் எப்பிரிவினாலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.. | இது தொடர்பாக தேடியறியப்பட்டு கருத்து முன்வைப்பதற்கு குறிக்கப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனையொன்று செய்யக் கூடிய வகையில் அறிக்கை பதிவேடு முறையாக பேணிச் செல்லல். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

#### 2.1.1 வருமான மதிப்பீடு தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | -------------------------------- | ----------- |
| (அ) | மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாரான வருமானத்துடன் ஒப்பிடும் போது வரி வருமானம் ரூபா 13,653,027 இனால், அதாவது 12 சதவீதத்தினாலும் பெற்றோலிய உற்பத்தி வரி வருமானம் ரூபா 11,888,924,706 இனால், அதாவது | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | மதிப்பீடு விவேகத்துடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 18 சதவீதத்தினால் குறைந்திருந்தது. Covid 19 தொற்று நிலை இதற்காக காரணமாகியுள்ளமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| **(ஆ)** | இறக்குமதி வரி விகிதம் குறைதல் மற்றும் இறக்குமதி மட்டுப்படுத்தல் காரணமாகக் கொண்டு இறக்குமதி வரி வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை விட ரூபா 25,817,407,597 இனால் குறைந்திருந்ததுடன் அது சதவீதமாக 18 சதவீதமான வீழ்ச்சியாகும். மேலும், விசேட வியாபார பொருள் வரிக்காக மதிப்பிடப்பட்டிருந்த வருமானத்தினை பார்க்கிலும் உள்ளவாரான வருமானம் 16 சதவீதத்தினால் வீழ்ச்சியமைங்திருந்ததுடன் அப் பெறுமதி ரூபா 15,291,047,032 ஆக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | -மேற்படி- |
| **(இ)** | வாகனங்கள் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டமையினால் வாகன உரித்தின் அடிப்படையில் அறவிடப்பட்ட வரி உள்ளவாரான வருமானத்தினை பார்க்கிலும் 51 சதவீதமான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் மாற்றத்தின் வீழ்ச்சி ரூபா 742,478,146 ஆக காணப்பட்டது. வரி வருமானம் குறைந்தமை இதற்கு தாக்கமளித்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | -மேற்படி- |
| **(ஈ)** | தண்டப்பணம் மற்றும் பறிமுதல் செய்தலில் ரூபா 4,800,000,000 ஆன வருமானமொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாரான வருமானம் ரூபா 2,889,218,648 ஆனதினால் 40 சதவீதமான வீழ்ச்சி, அதாவது ரூபா 1,910,781,352 ஆன பற்றாக்கறையொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | -மேற்படி- |

### 2.1.2 கடந்த ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | --------------------------------- | ----------- |
| **(அ)** | ஆண்டின் ஒட்டுமொத்த வரி வருமானத்தில் 0.2 சதவீதம், அதாவது ரூபா 96,346,973 ஏற்றுமதி வரி வருமான குறியீட்டின் கீழ் சேர்க்கப்பட்டிருந்ததுடன் | 2019 ஆண்டிற்கு இணையாக 2020 ஆம் ஆண்டினுள் ஏற்றுமதி அளவில் பெரிய குறைவொன்று காணப்பட்டது. இது ஏற்றுமதி வரி அளவை போன்றே ஏற்றுமதி செஸ் வரி அளவு | மிக உகந்த வகையில் பொருண்மையான வருமான வளர்ச்சி அடையும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்த ஆண்டில் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 170,442,852 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டில் ஏற்றுமதி வரி வருமானம் ரூபா 74,095,879 இனால், அதாவது 43.47 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | வீழ்ச்சியடைவதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. கொரோனா நிலையினால் ஏற்றுமதி குறைந்தமையினால் இந்த நிலை ஏற்பட்டது. கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் இறக்குமதி செஸ் வரி வருமான குறியீட்டின் கீழ் ரூபா 47,295,124,841 ஆன வருமானம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் இந்த வருமான குறியீட்டின் கீழ் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 48,403,019,454 ஆகும். முன்னைய ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,107,894,613 இனால், அதாவது 2.29 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கு இணையாக 2020 ஆம் ஆண்டினுள்<br>(அ) இறக்குமதி செய்யப்பட்ட அளவு பாரியதாக வீழ்ச்சியடைந்துள்ளது. கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும்.<br>(ஆ)பல எண்ணிக்கையிலான பொருட்கள் தற்காலிக கட்டுப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (Te mporary Suspended) அக் காரணத்தினால் ஏற்றுமதி செஸ் வரி இணையாக வீழ்ச்சியடைந்துள்ளது. கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | -மேற்படி- |
| **(இ)** | ஏற்றுமதி செஸ் வரி வருமானம் குறியீட்டின் கீழ் ரூபா 2,013,974,216 ஆன வருமானம் சேர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டில் இந்த வருமான குறியீட்டின் கீழ் சேர்க்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,299,688,371 ஆக காணப்பட்டது. கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 285,714,155 இனால், அதாவது 12.42 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| **(ஈ)** | மீளாய்வாண்டில் இலங்கை சுங்கத்தின் மொத்த வருமானமான ரூபா 566,462,925,975 இல் ரூபா 53,111,075,294 ஆண தொகை, அதாவது 16.67 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தும் பெற்றோலிய உற்பத்தி வரி | பெற்றோலிய உற்பத்தி வரி வீழ்ச்சியடைவதற்கான பிரதான காரணமாக, 2020 ஆம் ஆண்டினுள் இணையாக பெற்றேலியம் இறக்குமதி அளவு வீழ்ச்சியடைந்தமையாகும். கொரேனா நிலையினால் எரிபொருள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டமையினால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டினை பார்க்கிலும் ரூபா 8,629,228,352 இனால், அதாவது 13.98 சதவீதத்தினால் குறைந்திருந்தது. | இந்த நிலைமை ஏற்பட்டது. கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | |
| **(உ)** | மோட்டார் வாகனங்கள் உற்பத்தி வரியாக ரூபா 48,759,937,998 ஆன வருமானமொன்று சேர்க்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டில் சேர்க்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 130,377,881,902 ஆனதினால் கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 81,617,943,904 இனால், அதாவது 62.6 சதவீதத்தினால் குறைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | மோட்டார் வாகன இறக்குமதி மீது விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடு (Temporary Suspended) காரணத்தினால் 2020 மார்ச் தொடக்கம் இது வரையிலும் மோட்டார் வாகனம் இறக்குமதி மேற்கொள்ளப்படாமை காரணத்தினால் அதனூடாக பெறப்படுகின்ற மோட்டார் வாகன உற்பத்தி வரி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | -மேற்படி- |

### 2.1.3 நிலுவை வரி வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | --------------------------------- | ----------- |
| **(அ)** | 2020 திசெம்பர் 31 இற்கு ஒட்டுமொத்த நிலுவை வரி பெறுமதியில் ரூபா 22,798,404,254 ஆன தொகை அதாவது, 36 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது இறக்குமதி நிலுவை வரியாகும். அதிலும் ரூபா 6,370,798,202 ஆன தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து வருகின்றதாகும். | தங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அரசிற்கு பெறப்பட வேண்டிய வருமானம் தாமதமின்றி சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல். |
| **(ஆ)** | 2020 திசெம்பர் 31 இற்கு ஒட்டுமொத்த நிலுவை வரி பெறுமதியில் ரூபா 16,082,423,443 ஆன தொகை, அதாவது 25 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது விசேட வியாபார பொருட்கள் வரியினாலாகும். அதில் ரூபா 4,488,152,878 ஆன தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து நிலுவை யாக காணப்பட்ட வருமானமாவதுடன் அப் பெறுமதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் | -மேற்படி- | நிதி பிரமாணம் 128 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படாதிருந்தது. | | |
| (இ) | 2011 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்ட பிரதேச அடிதள வசதி அபிவிருத்தி வரி ஊடாக 2011 திசெம்பர் 31 இற்கு ரூபா 108,659,190 ஆன நிலுவை வரி வருமானமொன்று அறவிடப்படுவதற்கு காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அப் பெறுமதி அறவிடப்படுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | ரூபா 3,233,204,301 ஆன பெற்றோலிய உற்பத்தி வரி வருமானம் ஒட்டுமொத்த நிலுவை வரி வருமானத்தில் 5 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. | அத்தியாவசிய சேவைக்காக அரச நிறுவனத்திற்காக கடனிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருளுக்காக அறவிடப்பட வேண்டிய பணமாவதுடன், 2020 ஆம் ஆண்டினுள் ரூபா 11,193,111,605 ஆண தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 128 மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |
| (உ) | நிலுவை வரி வருமானத்தில் ரூபா 10,275,489,817, அதாவது 16 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது துறைமுகங்கள் மற்றும் விமான நிலையம் அபிவிருத்தி வரி பணமாவதுடன் அதிலும் ரூபா 2,868,111,659, 2017 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட வருமானமாகும். மேலும் 2020 திசெம்பர் 31 இற்கு மொத்த நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 6,152,560,946 அதாவது 9.69 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இறக்குமதி செஸ் வரி பணத்தில் ஆவதுடன் அதில் ரூபா 1,716,039,908 ஆன தொகை 2017 ஆண்டிலிருந்து அறவிடப்படாதிருந்தது. | தங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | -மேற்படி- |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 இற்கு மொத்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 4,711,376,538 அதாவது, 7 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துவது உற்பத்தி விசேட ஏற்பாடு மோட்டார் வாகன வரி வருமானத்தில் என்பதுடன் | தங்கள் அவதானிப்புடன் இணங்குகின்றேன். வெவ்வேறு தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பொது திறைச்சேரியின் அங்கீகாரத்துடன் சுங்க வரி பின்னர் செலுத்தும் அடிப்படையில் அரசாங்க அமைச்சு மற்றும் ஏனைய | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| அதில் ரூபா 1,314,930,120 ஆன தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்டது. | துணை நிறுவனங்களுக்கு பொருட்கள் வழங்கப்படுவதற்காக பல ஆண்டுகளுக்கு முன் இருந்து கொடுக்கப்படுகின்ற சலுகை வேலைத் திட்டத்தின் பெறுபேறாக இந்த சுங்க வரி நிலுவையாகவுள்ளது. சுங்க அறிவிப்பு பிரிவினால் இறக்குமதி பொருட்கள் தொடர்பாக தகவல்கள் பெறப்பட்டு இந் நிறுவனங்களுக்கு தொடர்ந்து தெரிவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2020 ஆம் ஆண்டினுள் நிலுவை சுங்க பணம் ரூபா 22,525,899,343 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கை விரைவாக நிறைவேற்றும் தேவையினால் நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வு குழுவின் ஆலோசனை அடிப்படையில், இது தொடர்பாக தேசிய வரவு செலவு, முகாமைத்துவ கணக்காய்வு மற்றும் இலங்கை சுங்கம் ஆகிய திணைக்களங்களின் உத்தியோகத்தர்களினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக நிலுவை சுங்க பணம் அறவிடப்படுவதற்காக மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | |

## 2.2 செலவுகள் முகாமைத்துவம்

வருடாந்த வரவு செலவு மதிப்பீடு தாரித்தல் மற்றும் நிதியேற்பாடு எஞ்சியமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 2.2.1 தொடக்க மற்றும் திருத்திய செலவு மதிப்பீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 03 மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு விடயங்களின் தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய செலவு | சுங்க உத்தியோகத்தர்களினால், நாடு முழுதும் வெவ்வேறு உப அலுவலகங்களில் சேவை செய்வதுடன் திணைக்கள இடமாற்றல் முறைமை மற்றும் வெவ்வேறு கடமை | மதிப்பீட்டினை ஆழ்ந்த அறிவுடன் தயாரித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டிற்குமிடையே 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதம் வரையான வீச்சுடை முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன | தேவைக்காக மேற்கொள்ளப்படுகின்ற பயணங்களுக்காக இணைந்த படி மற்றும் போக்குவரத்து செலவினம் மீள்நிரப்பல் மேற்கொள்ளப்படல் வேண்டும். மையப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறையின் கீழ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் வவுசர்கள் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பும் போது தாமதங்கள் ஏற்படுகின்றது. அதன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் முன்னைய ஆண்டிற்குரிய பிரயாண செலவு பாரியளவில் காண்படும் ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்கு நேரிடும். அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கு தொடர்படையதாக 2020 ஆம் ஆண்டில் அண்ணளவாக ரூபா 15 மில்லியன் தொகையொன்று பிரயான செலவாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. மேலும், புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்தலும், பிரயாணச் செலவு பெறுமானம் அதிகரிப்பிற்கு காரணமாகியுள்ளது. | |
| **(ஆ)** | செலவு விடய இலக்கம் 247-1-1-0-1002 (2) மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுக்காக தொடக்க மதிப்பீடு ரூபா 12,100,000 ஆக காணப்பட்டதுடன் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 14,100,000 ஆகியமையினால் மதிப்பீட்டுக்களின் இடையில் 17 சதவீத மாற்றம் அவதானிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 நிலையினால் உத்தியோகத்தர்கள் சேவைக்கு சமூகமளிக்காமை மற்றும் கட்டுப்படுத்தப்படல் அடிப்படையில் அனேக செலவு விடயங்களில் | உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரித்தமையினால் ஒப்பிட்டளவில் மேலதிக கொடுப்பனவிற்கான செலவினம் அதிகரித்திருந்ததுடன் கொவிட் 19 நிலையின் மீது உத்தியோகத்தர்களின் வருகை கட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிகளில் தவறிட்ட கடமைகள் நிறைவேற்றுவதற்காக கட்டுபாடுகள் அகற்றப்பட்ட காலத்தில் உத்தியோகத்தர்கள் மேலதிகமாக கடமையாற்றுவதற்கு நேரிட்டது. | செலவு விடயத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் போது ஆழ்ந்த அறிவுடன் நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடு எஞ்சி காணப்பட்டமை கணக்கீட்டு உத்தியோகத்தர் அறிவித்திருக்கும் போது மேலதிக கொடுப்பனவு செலவு விடயத்திற்கு முன்னைய ஆண்டினை விட அதிகரித்தல் கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதானது. | | |
| **(இ)** | செலவு விடய இலக்கம் 247-1-1-0- 1101- உள்நாட்டு பயணச் செலவுகள் சம்பந்தமான தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையே 20 சதவீத மாற்றம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, அச் செலவு விடயத்திற்காக முன்னைய ஆண்டின் மதிப்பீடு ரூபா 67,500,000 ஆக காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூபா 90,800,000 ஆக காணப்பட்டது. கடந்த ஆண்டிற்கு ஒப்பிட்டளவில் 2020 ஆம் ஆண்டினுள் ரூபா 23,300,000 மதீப்பீடு அதிகரித்திருந்தது. கொவிட் 19 தொற்று நிலையினால் அனேக செலவு விடயங்கள் எஞ்சி காணப்படினும் உள்நாட்டு பயணச் செலவுகளுக்காக செலவுகள் அசாதாரண வளர்ச்சியொன்று காண்பிக்கின்றமை கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதானது. | பிரயோக பிரச்சனைகளின் மீது தொடர்ச்சியாக கடந்த ஆண்டுகளில் பிரயாண செலவினத்திற்காக நடப்பு ஆண்டில் கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தமையினால் 2020 ஆம் ஆண்டிலும் மதிப்பீட்டினை பார்க்கிலும் பிரயாணச் செலவினம் ஏற்பதற்கு நேர்ந்தது. சேவைக்கு அழைத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட காலப் பகுதியிலும் உத்தியோகத்தர்களின் பயண தடவை அதிகரித்தமை காரணத்தினாலும் செலவு அதிகரித்திருந்தது. அத்தியாவசிய சேவை நிறைவேற்றிய இந்த திணைக்களத்தின் ஸ்ரொப் கடமை உட்பட ஏனைய வெவ்வேறு அத்தியாவசிய கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் கட்டுப்பாட்டுக் காலத்திலும் கடமையில் ஈடுபடுத்த நேர்ந்தமையினாலும் இந்த செலவினம் அதிகரித்திருந்தது. | -மேற்படி- |

### 2.2.2 நிதிஏற்பாடு சேமிக்கப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | -------------------------------- | ----------- |
| (அ) | **மீண்டெழும் செலவுகள்** | | |
| | 7 செலவு விடயங்களின் நிகர கணக்காய்வு அவதானிப்புடன் ஆழ்ந்த | | |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டில் சதவீதமாக 09 சதவீதம் தொடக்கம் 18 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் அதன் பிரகாரம் மீண்டெழும் செலவிற்காக ரூபா 3,416,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 20 சதவீதமாக ரூபா 697,476,786 எஞ்சி காணப்பட்டது. | இணங்குகின்றேன். | அறிவுடன் மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| **(ஆ)** | **மூலதனச் செலவுகள்** | | |
| | மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 162,200,000 தொகையில் 63 சதவீதம் சேமிப்பாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் 10 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக 09 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன்.<br>2020 ஆம் ஆண்டில் வாக்குப் பதிவு கணக்கு ஊடாக பல சந்தர்ப்பங்களில் நிதியேற்பாடு பெற்றுக்கொடுத்தல் காரணத்தினால் மற்றும் கொரோனா தொற்று நிலையினால் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செலவு முகாமைத்துவப்படுத்துவதற்கு கடினமாகவிருந்தது. | -மேற்படி- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

### 2.3.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக அறிக்கையிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | ---------------------------------- | ----------- |
| (அ) | 10 செலவு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 26,623,190 பொறுப்புக்களின் பெறுமதி திறைசேரி அச்சுப் பிரதிகளில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | **247-1-1-0-1403 ஆம் இலக்க** செலவு விடயத்தினை தவிர்த்து ஏனைய செலவு விடயங்கள் தொடர்பான அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன்.<br>05/2020 ஆம் இலக்க வழிக்காட்டி கோவையின் பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு பின்னர் அறிக்கையிடப்பட்ட பெறுமதி — ரூ. 4,069,204<br>CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அறிக்கையிடப்பட்ட (திறைச்சேரி அச்சு பிரதிகளில் உள்ளடக்கப்பட்ட) பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் — ரூ. 7,523,372<br>குறிப்பு iii பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் — ரூ.11,592,576 | சரியாக கணக்குகளை அறிக்கையிடுதல் இடம்பெறுதல் வேண்டும். |

கடப்பாடுகள்

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | 05 செலவு விடயங்களுக்குரிய திறைச்சேரி அச்சு பிரதி மற்றும் பொறுப்பு அறிக்கை இடையே ரூபா 46,524,640 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | 1002,1003,1101,1202 மற்றும் 1409 ஆகிய செலவு விடயங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். எவ்வாறெனினும் 1403 செலவு விடயத்திற்கு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு அமையும்.<br>குறிப்பு iii பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் — ரூ.11,592,576<br>CIGAS கணனி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அறிக்கையிடப்பட்ட (திறைச்சேரி அச்சு பிரதிகளில் உள்ளடக்கப்பட்ட) பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் — ரூ. 7,523,372 | -மேற்படி- |
| **(இ)** | இறுதி கணக்கினுள் காண்பிக்கப்பட்டிருப்பினும் 2020 ஆம் ஆண்டில் இறுதி கணக்குடன் முன்வைக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடு பதிவேடுகளில் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 47,628,444 ஆகும். | கணக்காய்வினால் காண்பிக்கப்பட்டுள்ள பில்டின் மெய்ன்டிடனஸ் நிறுனம் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,650,444 ஆன தொகை பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்படுகின்றது.<br>எஞ்சிய பெறுமதி பொறுப்பாக அடையாளப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டிருப்பினும் பொறுப்பு பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுவதற்கு முடியாது போயிருந்தது. | -மேற்படி- |
| **(ஈ)** | திணைக்களத்தினால் தனியார் நிறுவனத்துடன் கொள்கலன் வருடல் செயற்திட்டதிற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 587,725,600 ஆன தொகை பிரச்சனைக்குரிய நிலையின் கீழ் காணப்படுகின்றமையினால் அத் தொகை நிறுவனத்தின் கடப்பாடு அல்லது பொறுப்பாக கணக்கினுள் காண்பிக்கப்பட்டிருக்கவில் லை. | கொள்கலன் வருடல் செயற்திட்டம் அரசிற்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகின்றதுடன், அந் நடவடிக்கை நிறைவேற்றும் வரை தொடர்புடைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டில்லை. குறித்த அங்கீகாரம் அமைச்சரவையிலிருந்து பெறப்பட்ட பின்னர் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். | கணக்கு தயாரிக்கும் போது பொதுத் துறை கணக்கீட்டு கொள்கை பின்பற்றல் வேண்டும். |
| **(உ)** | வருடாந்த ஒதுக்கீட்டு சட்டத்தின் ஊடாக ஒதுக்கப்படுகின்ற நிதியேற்பாடு உகந்த மட்டத்தில் பயன்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சி | மேற்படி (அ) பதிலுக்கு கவனத்தை முன்வைக்கின்றேன். | திறைச்சேரி சுற்றறிக்கை ஆலோசனைகளு க்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| கடப்பாடு மற்றும் பொறுப்புக்களுக்கு உடன்படல் தடுக்கும் நோக்கத்துடன் கடப்பாடு மற்றும் பொறுப்பு தொடர்பாக தகவல் அமைப்பு பேணிச்செல்லலும், நாள்தோறும் தகவல்கள் திறைச்சேரிக்கு அறிக்கையிடப்படுவதற்கும் , திணைக்கள தகவல்கள் ஒப்பிடும் தேவைகள் வலியுறுத்தப்பட்டு வெவ்வேறு ஆலோசனைகள் மற்றும் வழிக்காட்டிகள் உள்ளடக்கப்பட்டு திறைச்சேரியினால் அவ்வப்போது பல சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் அச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக இலங்கை சுங்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | | |

### 2.3.2 நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------- | --------------------------------- | ----------- |
| சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக 2020 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கத்தினால் 03 செலவு விடயங்களுக்குரிய நிதியேற்பாட்டினை மிகைத்து ரூபா 2,908,508 ஆன பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தது. | சில பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்தவுடன் அடையாளப்படுத்துவதற்கு ஏற்படுகின்றமையினால் மற்றும் அத் தருணத்தில் குறித்த சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையினால் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நேர்ந்தன. | நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படா திருத்தல். |

### 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------- | --------------------------------- | ----------- |

| | | |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் இலங்கை சுங்கத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்பட்டு வருகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத்தன்மையை உரிய காலத்தில் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை விளைதிறனாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். மேலும், அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வு செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரிவு தொடர்பாக நி.பி 135 இன் கீழ் அதிகாரத்தை ஒப்படைத்தல், கொடுக்கல்களை சில உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் கடமைகளை ஒப்படைத்தல் ஆகிய நிதிக் கட்டுப்பாடுகளுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | இணக்கமின்மைகள் | | |

| | | | |
|---|---|---|---|
| (அ) 2019 ஏப்ரல் 04 ஆந் திகதிய 2117/48 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (அ), (ஆ) பந்தி | வர்த்தமானி பத்திரிக்கையின் பிரகாரம் மற்றும் முன்மொழியப்பட்ட வரி சலுகையின் கீழ் இலங்கை சுங்கத்தினால் தடை நீக்கம் செய்யப்படுகின்ற அனைத்து மோட்டார் வாகனங்கள், விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்கள் வரையினுள் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் தனிபட்ட பெயரில் பதிவு செய்யப்படல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாத வாகனங்கள் தடை நீக்கம் செய்யப்படும் போது குறித்த உற்பத்தி வரியினை செலுத்த வேண்டும். எனினும் 2019 செப்தெம்பர் 02 திகதிய 21/215 ஆம் இலக்க சுங்க பதிவேட்டிற்கு தொடர்புடைய Nissan Used Xl Trail வாகனத்தினை பதிவு செய்தல் மோட்டார் வாகன திணைக்களத்தினால் மறுத்திருந்த போதிலும் அந்த வாகனத்திற்கான வங்கி பிணை விடுவிக்கப்பட்டமையினால் ரூபா 8,112,446 ஆன வரி பணம் அரசு இழந்திருந்தது. | இது தொடர்பாக எனது ESD/GE/3/16/2020 இலக்க மற்றும் 2020.09.26 திகதிய கணக்காய்வு ஐயவினா ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பதில் இதற்கு பொருந்தும். | குறித்த வர்த்தமானி அறிவித்திலில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத் திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>-------------------- | | | |
| (i) XXVIII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பந்தி | உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் தொடர்பாக குறித்த பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்ற வருகைப் பதிவேடுகள் நாளாந்தம் பதவிநிலை உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை | மேற்பார்வை செய்யப்படுகின்றது. | தாபன விதிக் கோவையின் XXVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆவது பந்தி | • 01 ஆண்டிற்கு குறைந்த ரூபா 443,490,830 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 531,766 ஆன ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 01 ஆண்டிற்கு குறைந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியான ரூபா 4,466,381 இல் ரூபா 3,147,273 ஆன தொகை 2021 ஆம் ஆண்டில் இது வரையில் தீர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 05 ஆண்டுகளுக்கு அதிகமான ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு உள்ள கடன் மீதியின் கீழ் ரூபா | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | 10,000 இற்கு குறைந்த தீர்க்கப்படாத கடன் மீதி ரூபா 32,050 தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு கோரப்பட்டுள்ளது. நி.பி 109 இன் கீழ் நட்டங்கள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நிதி அமைச்சின் மேலதிக செயலாளரின் MF1/02/01/cus/53 ஆம் இலக்க மற்றும் 2021.02.10 திகதிய கடிதத்தில் (பொது 285) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அவ் ரூபா 531,766 இல் ரூபா 11,041 தொகை புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| | • வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 1 ஆண்டிற்கு குறைந்த ரூபா 444,151 உம், 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 68,800 உம், 04 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 106,220 உம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,411,666 ஆன கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,411,666 இல் ரூபா 20,009 ஆன தொகை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 01 ஆண்டிற்கு குறைந்த வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள் வருகின்றது. எனவே, அவ் பரிசோதனைகள் முடிவுறுத்தப்பட்ட பின்னர் ரூபா 444,151 ஆன தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | அரச நிறுவனங்களின் அனைத்து உத்தியோகத்தர்களும் விரல் அடையாள இயந்திரத்தினை பயன்படுத்தி வருகை மற்றும் வெளியேறல் குறிக்கப்பட வேண்டியிருப்பினும் இலங்கை சுங்கத்தின் ஒரு உத்தியோகத்தரேனும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதான அலுவலகம், மாகாண அலுவலகங்கள், துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகிய இடங்களில் தொடர்புடைய பகுதிக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் மீது மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், விரல் அடையாளமிடல் தொடர்பான அறிக்கையொன்று 2021.04.06 ஆம் திகதி நடத்தப்பட்ட அரசாங்க கணக்குகள் | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்குழுவிற்கு (COPA) முன்வைக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) நிதிப்பிரமாணம் 485(4) மற்றும் 2004 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 118 ஆம் இக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1:1:6 மற்றும் 1:1:7 ஆம் பந்திகள் | உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களங்களுக்கிடையே தீர்த்து வைக்கப்படாத கடன் மீதிகள் காணப்படாமை கவனத்திக் கொள்ள வேண்டிய போதிலும், இடமாற்றப்பட்டு சென்ற 01 ஆண்டுக்கு குறைந்த ரூபா 291,181 தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 138,551 தொகையுமாக தீர்க்கப்படாத கடன் மீதிகள் காணப்பட்டன. | இடமாற்றப்பட்டு சென்ற ஒருவருக்குரிய ரூபா 210,099 ஆன தொகை 2021 பெப்ரவரி மாதம் தீர்க்கப்பட்டுள்ளது. இன்னமொருவர் அமைச்சரொருவரின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அப் பதவி நீக்கப்பட்டதுடன் கடன் மீதி மீண்டும் திணைக்களத்திற்கு துறைமுகங்கள் அபிவிருத்தி மற்றும் கடற்படை அலுவலல்கள் அமைச்சினால் கையேற்கப்பட்டுள்ளது. தவறதலாக அக் கடன் மீதி 01 ஆண்டிற்கு குறைந்த நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அவ் உத்தியோகத்தர் அதற்கு பின்னர் இடமாற்றப்பட்டுள்ள சேவை நிலையம் தொடர்பான தகவல்கள் தேடப்பட்டு வருகின்றது. மற்றைய உத்தியோகத்தரின் கடன் மீதி துறைமுகங்கள், கடற்படை அலுவலல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் 2019 ஒக்தோபர் மாத கணக்கு பொழிப்பறிக்கை ஊடாக இந்த திணைக்களத்தின் பீ கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அவ் உத்தியோகத்தரின் தகவல்களும் தேடப்பட்டு வருகின்றது. | நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) அரச பெறகை வழிக்காட்டி கோவையின் 07 ஆம் அதிகாரம் | நிறுவனத்தினால் தேவையை மிகைத்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த காலணி மற்றும் மேஸ் ஜோடிகளுக்கு தொடர்புடைய பெறுகை பணியின் போது மீளாய்வு குழுவொன்றின் உதவி பெறப்பட்டிருக்கவில்லை. | எனது ESD/GE/03/01/2021 ஆம் இலக்க மற்றும் 2021.05.04 திகதிய கணக்காய்வு ஐயவினாவின் 05. (அ) மற்றும் (ஈ) ஊடாக இதற்காக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள பதில்கள் இதற்கு பொருந்தும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய முறையான வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) DAM/01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தி | உள்ளக கணக்காய்வாளரின் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தல் மற்றும் அவ் அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் திருத்தப்படுவதற்கு பின்னூட்டல் செய்றபாடுகளை மேற்கொள்ளல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் பணியாயிருப்பினும் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்களில் காண்பிக்கப்பட்டுள்ள குறைப்பாடுகள் சரி செய்தல் திருப்தியான மட்டத்தில் காணப்பாடாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. . | இவ் விடயங்கள் தொடர்பாக உங்கள் PUR/A/CUS/2020/D/04 மற்றும் 2020.10.06 திகதி முன்வைக்கப்பட்ட கணகக்காய்வு அவதானிப்புக்களுக்கு தயவுடன் தங்கள் கவனத்தை செலுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் 2021.02.21 ஆம் திகதி தொடக்கம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பதவிக்காக இலங்கை கணக்காளர் பதவியில் 1 ஆம் வகுப்பின் உத்தியோகத்தரொருவரை நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அரச கணக்காய்வு பிரிவின் ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள குறைப்பாடுகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் DMA/01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சரியாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு அறிக்கை தொடர்பில் முறையான கவனம் செலுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள குறைப்பாடுகள் சரி செய்து கொள்வதற்கு முறையான பின்னூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iv) சுங்க திணைக்களத்தின் கட்டளை 375(3) | அனைத்து பிரிவுகளிலும் உப அலுவலகங்களிலும் உத்தியோகத்தர்கள் அலுவலக வளாகத்தில் இருந்து வெளியேறல் தொடர்பாக நகர்வு பதிவேடொன்று பேணிச் செல்லல் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது இடத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் அது குறித்து மேற்பார்வை செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நகர்வு பதிவேடு பேணிச் செல்லல் தொடர்பாக அனைத்து பிரிவு மற்றம் உப அலுவலகங்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்கள கட்டளை பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களின் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஏ) இலங்கை சுங்கத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 10.02.01.02 ஆம் பந்தி | சுங்க பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தகுதிகள் தொடர்பாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனை பின்பற்றப்படாது மேலதிக பணிப்பாளர் பதவிக்கு 06 உத்தியோகத்தர்கள் பதவி உயர்த்தப்பட்டிருந்தனர். | சுங்க திணைக்களத்தின் பதவி உயர்த்தல் நடைமுறையின் பிரகாரம் பதவி வெற்றிடம் உருவாகும் சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களின் மூத்த நிலை கருத்திற் கொள்ளப்பட்டு அவ் வரிசையின் பிரகாரம் பதவி உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் ஆட் சேர்ப்பு நடைமுறை ஒழுங்குகள் பின்பற்றப்படல் வேண்டும். |

பின்னர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் PSC/APP/6/679/2016 இலக்க மற்றும் 2017.05.02 கடிதத்தில் 1979.10.15 திகதி வரையில் சேவைக்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக மட்டும் நிறைவேற்று i வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் 10.2.1.2 இன் (1) உறுப்புரைக்கு மாறாக செயற்படுவதற்கும் அதற்கு மேல் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் போது குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் மற்றும் தகுதிகளுடன் ஆட்சேர்பு நடைமுறையின் 10.2.1.2.இன் (1) தேவையும் கருத்திற் கொள்ளப்பட்டு நிறைவேற்று i சேவைக்கு பதவி உயர்த்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத் தருணத்தில் மூத்தநிலை பிரகாரம் உத்தியோகத்தர்கள் நிறைவேற்று i வகுப்பிற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் ஊடாக பதவி உயர்வு பெற்றுக் கொடுக்கும் பரிந்துரை முன்வைக்கப்பட்ள்ளதாவது, அவ் விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டாகும்.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இத தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------- | ---------------------------------- | ----------- |
| (அ) | சுங்க புலனாய்விற்கு தொடர்புடைய கட்டாய விடுமுறையிலிருந்த | தகவல்கள் தேடியறியப்பட்டு வருகின்றது. | வெளிநாடு செல்வதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தரொருவர் வெளிநாடு செல்லல் தடை செய்யப்பட்டிருப்பினும் முறையான அங்கீகாரமின்றி வெளிநாடு சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| **(ஆ)** | 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதியாக பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்று அதற்காக ஒரு நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் சுங்க வெகுமதிப் பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட 1988 சனவரி 28 ஆந் திகதிய பீஎல்118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. அதற்கிணங்க 1999 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான 22 ஆண்டுகளில் வெகுமதிப் பணமாக ரூபா 19,748,129,578 செலுத்தப்பட்டிருந்தது. | வெகுமதி தொகை கொடுப்பனவு செய்தல் தொடர்பாக 1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2)(ஆ) பிரிவின் பிரகாரம் உங்கள் அவதானிப்புடன் இணங்கவில்லை. 1988 ஆம் ஆண்டில் 118 ஆம் திணைக்கள கட்டளை வழங்கும் போது தேவையான அங்கீகாரம் பெறப்பட்டு அது வழங்கப்பட்டுள்ளதா என்று கருதக் கூடியதுடன் இன்னுமாக இது தெடர்பில் தேடியறியப்படல் வேண்டும்.<br><br>மேல் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுத்தல் நிதி அமைச்சின் ஊடாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரின் அங்கீகாரம் காண்பிக்கப்படுகின்ற நடைமுறையினை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல். அங்கீகரித்த நடைமுறை இல்லாதுவிடின் அவ்வாறு மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| **(இ)** | முறையான அங்கீகாரமின்றி நாட்டிலிருந்து வெளியேற்றி கொண்டு செலவதற்கு முயற்சித்த 53,455 அ.டொலர் ஆன பணம் சுங்கத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் நிதி அமைச்சரின் கோரிக்கையின் பெயரில் (சுங்க கட்டளை சட்ட 164 இன் கீழ்) நியாயமான கருத்து முன்வைக்கப்படாது பணம் மீண்டும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையின் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | சுங்க கட்டளை சட்டத்தின் 164 உறுப்புரையின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் விடுவிக்கப்படுவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் காணப்படினும், நட்டம் அல்லது ஏனைய கிரயம் ஏற்பதற்காக அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டில்லை.<br><br>அதன் பிரகாரம் நட்டம் / மிகை செலுத்தல்கள் சட்ட ரீதியானதல்ல. |

காரணத்தினால் ஏற்பட்டடிருந்த ரூபா 1,603,650 ஆன நட்ட பெறுமதி நி.பி 106 மற்றும் 113 இன் கீழ் நட்டமாக குறிக்கப்பட்டிருந்தது.

## 2.7 முற்பணங்கள் செலுத்தல் மற்றும் தீர்பனவு செய்தல்

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப்பிரமாணம் 371 (2) (அ) பிரகாரம் ஏதேனும் விசேட பணிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட இடைகால கட்டுநிதி பணி முடிவுறுத்தப்பட்டவுடனே தீர்க்கப்பட வேண்டியிருப்பினும், 17 உத்தியோகத்தர்களினால் 23 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 1,746,850 ஆன முற்பணம் தீர்ப்பதற்கு 33 தொடக்கம் 313 நாட்கள் வரையான காலம் கடக்கப்பட்டிருந்தது. | உங்கள் PUR/A/CUS/2020/11 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலாக முன்வைக்கப்பட்ட எனது ESD/GE/03//04/2021 ஆம் இலக்க 2021.05.11 திகதிய கடிதத்தின் 01 பந்தியின் ஊடாக பதில் வழங்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 02) | நிதி பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) பிரகாரம் ஏதேனும் விசேட பணிக்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற தற்காலிக கட்டுநிதியின் உச்ச அளவிலான ரூபா 100,000 ஆன எல்லையை மிகைத்து உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | மேற்டி கடிதத்தின் 04 பந்தியின் பிரகாரம் பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.8 வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

வங்கி கணக்குகள் செயற்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அடையாளப்படுத்தப்பட்ட குறைப்பாடுகள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** மக்கள் வங்கி இல **001-1-001-2-9026644** | | |
| (i) 2020 திசெம்பர் 31 இற்கு வழங்கப்பட்டிருப்பினும் வைப்பிலிடப்பாத செல்லுபடியாகும் காலம் 06 மாதங்களைக் கடந்த கூட்டுத்தொகை ரூபா 125,631 ஆன காசோலைகள் காணப்படுகினறமை அவதானிக்கப்பட்டது. இக் காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் 396 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத் திகதிக்கு செல்லுப்படியாகும் காலம் 06 மாதங்களை மிகைத்த காசோலைகளின் பெறுமதி ரூபா 1,882,260 ஆகும். 2021 ஏப்ரல் 30 திகதிக்கு இந்த காசோலைகளில் ரூபா 1,756,628 ஆன பெறுமதியுடைய காசோலைகள் தடை நீக்கப்பட்டுள்ளது. எஞ்சி காணப்பட்டது ரூபா 125,631 ஆன காசோலைகள் மட்டுமே. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 2020 திசெமபர் 31 இற்கு அடையாளப்படுத்தப்படாத பெறுவனவுகள் மற்றும் அடையாளப்படுத்தப்படாத செலுத்தல்களாக முறையான ரூபா 148,523 மற்றும் ரூபா 153,243 ஆன வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அம் மீதிகள் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படப்பட்டதா என்று உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | 2020 திசெம்பர் 31 இற்கு அடையாளப்படுத்தப்படாத பெறுவனவுகள் ரூபா 148,523 ஆக காணப்படுகின்றதுடன் அடையாளப்படுத்தப்படாத செலுத்தல்கள் ரூபா 153,243 அக காணப்பட்டது. | குறித்த மீதிகள் அடைளாயப்படுத்தப் பட்டு கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |
| **(ஆ)** இலங்கை வங்கி கணக்கு இல **0007041606** | | |
| (i) 2020 திசெம்பர் 31 இற்கு கொடுப்பனவிற்காக முன்வைக்கப்படாத காசோலை பெறுமதியினுள் செல்லுப்படியாகும் காலம் 06 மாதங்கள் மிகைத்த ரூபா 466,415 ஆன காசோலைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக நிதி பிரமாணம் 396 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 திசெம்பர் 31 இற்கு ரூபா 466,415 ஆன பெறுமதியுள்ள காசோலைகள் மட்டும் எஞ்சி காணப்பட்டது. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 2020 திசெம்பர் 31 இற்கு அடையாளப்படுத்தப்படாத பெறுவனவுகள் மற்றும் செலுத்தல் மீதிகளாக முறையாக கூட்டுத்தொகை | 2020 திசெம்பர் 31 இற்கு அடையாளப்படுத்தப்படாத பெறுவனவுகள் ரூபா 1,224,852 ஆன மீதி அடையாளப்படுத்தப்பட்டு | குறித்த மீதிகள் அடையாளப்படுத்தப் பட்ட கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் |

| | | |
|---|---|---|
| ரூபா 1,238,868 மற்றும் ரூபா 2,726 வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் மீதிகள் அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட்டதா என்று உறுதிப்படுத்தும் சான்று கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே, 2020 திசெம்பர் 31 இற்கு அடையாளப்படுத்தப்படாத செலுத்தல்களின் மீதிகளான ரூபா 2,726.00 ஆன மீதி அடையாளப்படுத்தப்பட்டு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சுங்கத்தின் மத்திய கைதவிர்ப்பு பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட சுங்க புலனாய்வின் பின்னர் அழிக்கப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த மனித பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற இறக்குமதி செய்யப்பட்டிருந்த பாம் ஒயில் 105,570 கிலோ கிராம் உள்ளடக்கப்பட்ட 05 கொள்கலன்கள் அழிக்கப்பட்டதாக பொய் தகவல்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டு அவை களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் அதில் பகுதியொன்று சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை தொடர்பான புலனாய்வின் போது அவ் புலனாய்வினை செயற்படுத்திய மத்திய கைதவிர்ப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் அப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்திலிருந்து மாறாக நடவடிக்கை எடுத்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. சுங்க புலனாய்வு மேற்கொள்ளல் போன்று அவ் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பிரிவிடம் காணப்பட்ட பொருட்கள் அழித்தல் அல்லது விற்றல் ஆகிய பணிகளும் அப் பிரிவின் ஊடாகவே மேற்கொள்வதற்கு வசதியளித்திருத்தல் பெற்று கொடுத்தல் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட | இந்த 05 கொள்கலன்கள் துறைமுகத்திலிருந்து அகற்றல் ஊடாக அரசிற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை.<br><br>அங்கு குறிப்பிடப்பட்டுள்ள 05 கொள்கலன்கள் தொடர்பாக மத்திய புலனாய்வு பிரிவினால் CIB/INV/230/2019 ஆம் புலனாய்வு கோவையின் கீழ் ர்லனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், அவ் 05 கொள்கலன்களில் 04 ஏற்கனவே கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள Crude Farm Oil கால்நடை உணவுகள் தயாரிப்பதற்காக தகுந்ததென கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் தெரிவித்து அனுப்பப்பட்டுள்ளமையினால், இந்த 04 கொள்கலன்களில் உள்ளடக்கப்பட்டுள்ள Crude Farm Oil சுங்க கட்டளை சட்டத்தின் 162 பிரிவின் பிரகாரம், இலங்கை சுங்க மத்திய கைதவிர்ப்பு பிரிவினால் கால்நடை உற்பத்திக்கு மற்றும் விற்பனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக இந்த கொள்கலன்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எண்ணெய் பெறுமதி நிர்ணயிப்பதற்காக இலங்கை சுங்கத்தின் விலை பரீட்சை பிரிவிற்கு குறித்த மாதிரி முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த விசாரனை இறுதியில் சுங்க கட்டளை சட்டத்தின் 8.1 பிரிவின் பிரகாரம் நடத்துவதற்கு | சுங்க கட்டளை சட்டம் மற்றும் திணைக்கள சுற்றறிக்கை பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.<br>குறித்த பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | முறைக்கேடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அப் பிரிவினால் இறக்குமதியாளர்கள் தொடர்பாக தகவல்கள் தேடியறிய முடியாமை குறிப்பிடப்பட்டு பொய்யான தகவல்கள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் புலனாய்வு தொடர்பில் இறுதி அறிக்கை மத்திய கைதவிர்ப்பு பிரிவின் சுங்க பணிப்பாளருக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த பிரிவின் சுங்க அதிகாரி மற்றும் பிரதி சுங்க பணிப்பாளரினால் இறுதி முடிவு எடுக்கப்பட்டிருந்தது. | குறிக்கப்பட்ட சுங்க பரிசோதனையின் போது அரசிற்கு ஏதேனும் நட்டமொன்று ஏற்பட்டிருப்பின், சுங்க பரிசோதனை மேற்கொள்கின்ற பரிசோதனை உத்தியோகத்தரின் கட்டளையின் அடிப்படையில் அந் நட்டம் குற்றவாளிகளிடமிருந்து அறவிடப்பட முடியும். | |
| **(ஆ)** | பொது அழைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்த அண்ணளவான ரூபா 9 மில்லியன் பெறுமதியுடைய ஆடம்பர Toyota Land Cruiser மாடல் வாகனமொன்று விசேட பணி வாகன தொகுதியின் கீழ் ரூபா 1.5 மில்லியன் வரி மட்டும் அறவிடப்பட்டு விடுவிப்பதற்கு இலங்கை சுங்கத்தின் NC குழு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த வகை வாகனங்கள் பயனிகள் போக்குவரத்து தொகுதியின் கீழ் தடைநீக்கம் செய்யப்பட்டிருப்பின், அண்ணளவாக ரூபா 56 மில்லியன் வரி அறவிடப்பட வேண்டியிருந்தது. அக் காரணத்தினால் அரசிற்கு ரூபா 54,642,528 ஆன வரி வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | Toyota Land Cruiser வாகனம் தொடர்பாக மத்திய புலனாய்வு பிரிவினால் CIB/INV/2019/0206 ஆம் இலக்கத்தின் கீழ் சுங்க விசாரனை ஆரம்பிக்கப்பட்டதுடன், அவ் புலனாய்வின் போது சரியான சுங்க பொருட்கள் திருத்தப்பட்ட இலக்கங்கள் பெறுவதற்காக இலங்கை சுங்கத்தின் NC குழுவிற்கு (Nomenclature & Classification Committee) முன்வைக்கப்பட்டுள்ளது. அக் குழுவினால் வகையீட்டு இலக்கமாக 87059091 என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத் தீர்மானத்தின் அடிப்படையில் அவ் வாகனம் இறக்கமதியாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. எனவே, NC குழு தீர்மானம் பிரகாரம் அவ்வாறான வரி வருமானம் இழக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய குறித்த வருமானம் அறவிடப்பட்டு அரச வருமானத்தினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இலங்கை சுங்கத்தின் NC குழுவிற்காக சுங்க கட்டளை சட்டத்தின் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம், குழு அங்கத்தவர்களின் தீர்மானங்களுக்கு எதிரான மேன்முறையீட்டு அதிகாரம் மற்றும் NC குழுயின் பணிபொறுப்பினை முறையாக மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ----------------------- | ---------------------------------- | ----------- |
| **(அ) JAIKA உதவியின் அடிப்படையில் குழாய்கள் மற்றும் உதிரி பாகங்கள் இறக்குமதி** | | |
| (i) சுங்க கட்டளை சட்டத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் முதற் சந்தர்ப்பத்தில் வரி செலுத்தப்படாது பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்கு இலங்கை சுங்கத்தினால் தனியார் நிறுவனமொன்றிற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சுங்க குறிப்புக்கள் (Cusdec) 08 வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அ.டொ 5,139,621 ஆன பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது (To Bond). சுங்க கட்டளை சட்டத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் கிடங்கிலிருந்து விடுவிக்கப்படும் போது முன்னர் அறிவிக்கப்பட்ட பொருட்கள் இருப்பில் இன்வொயிஸ் பெறுமதியே அறிவிக்கப்படல் வேண்டும். எனினும் தேசிய ரீதியில் தயாரிக்கப்பட்ட இண்வொயிஸ் பயன்படுத்தப்பட்டு குறித்த பெறுமதி ஊடாக அ.டொ 6,350,364 ஆக பொய்யான தகவல்களுடன் நிறுவன குறிப்பு முன்வைக்கப்பட்டிருந்தது. அதனூடாக 1,210,743 அ.டொ பெறுமதி தொடர்புடைய நிறுவனத்திற்கு அதிகமாக பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட விசாரனையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின் பிரகாரம் மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையானவை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. அப் பரிந்துரையின் பிரகாரம் சுங்க கட்டளை சட்டத்தின் 72 மற்றும் 86 உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.<br><br>கிடங்கு கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு குறித்த செயன்நடைமுறை தொடர்பாக தெளிவான ஆலோசனை உள்ளடக்கப்பட்ட குறிக்கப்பட்ட திணைக்கள கட்டளை பெற்றுக் கொடுத்தல் பொருட்கள் சாதாரண களஞ்சியப்படுத்தப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கும் எழுத்துமூல முறைமையொன்று தயாரித்தல், அரச நிறுவனத்தினால் வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக பொருட்கள் பெறுகையின் போது அந்நிய செலாவணி பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு உடன்பட வேண்டியது உண்மையிலேயே அப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு செலவான CIF பெறுமதி மட்டுமென கருத்திற் கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | சுங்க சட்டத்தினை மீறல், தேசிய இன்வொயிஸ் ஏற்றல், இறக்குமதியார்களுக்கு சட்டவிரோத இலாபம் ஈட்டுவதற்கு ஊக்குவித்தல், சுங்க புலனாய்வுகள் சரியாக மேற்கொள்ளல் அரச நிறுவனம் தவறாக வழிநடத்தி நட்டம் ஏற்படும் நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றிற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ii) கிடங்கிற்கு பொருட்கள் கையேற்கும் போது செலுத்தப்பட வேண்டிய வரி பெறுமானம் ரூபா 263,301,203 ஆகவிருப்பினும், கிடங்கிலிருந்து பொருட்கள் | -மேற்படி- | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| விடுவிக்கப்படும் போது வரி கணிப்பிடல் ரூபா 325,800,859 என காண்பிக்கப்பட்டமையினால் இலங்கை அரசிற்கு ரூபா 62,499,656 ஆன வரி பணம் மேலதிகமாக செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (iii) பொய்யான இன்வொயிஸ் தயாரித்தல், பொய்யான தகவல்கள் முன்வைத்து வெளிநாடு மற்றும் தேசிய பணமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கையில் இது தொடர்பான விசாரனை மேற்கொள்ளப்பட்ட இலங்கை சுங்கத்தினால் தொடர்புடைய நிறுவனத்தினால் தவறு செய்யப்படாமை கருத்திற் கொண்டு விசாரனை முடிவுறுத்தப்பட்டமை கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதானது. | -மேற்படி- | -மேற்படி- |

**(ஆ)** சுங்க புலனாய்வு தொடர்பான செயலாற்றல்

| | | |
|---|---|---|
| (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை சுங்கத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் 25,674 சுங்க புலனாய்வுகள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 26 சதவீதமான அதாவது 6716 ஆனவை கணக்காய்வு திகதியான 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி வரையிலும் முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 1090 புலனாய்வுகள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமும், 928 புலனாய்வுகள் 04 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமும், 942 புலனாய்வுகள் 03 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமும், 900 புலனாய்வுகள் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமும், 1285 புலனாய்வுகள் 01 ஆண்டுக்கு மேற்பட்ட காலமும் பதிவு மட்டும் செய்யப்பட்டு | இவ் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்பட முடியாதென தெரிவிக்கப்படுகின்றதுடன், அக் கணக்காய்வு ஐயவினா தொடர்பாக மத்திய புலனாய்வு பிரிவினால் தயாரிக்கப்பட்டு எனது ESD/GE/03/02/2021 ஆம் இலக்க மற்றும் 2021.04.20 திகதிய அறிக்கை ஊடாக அதற்காக பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | சுங்க புலனாய்வு ஆரம்பிப்தற்கு தாமதம் மீளாய்வு செய்தல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு அரச வருமானத்தை பாதுகாத்தல். சுங்க புலனாய்வு தரவு இடையே வேறுபாடு காண்பிக்கப்படல் ஊடாக அடிப்படை குறைப்பாடு சரியானதன்று. அத்துடன் புலனாய்வு நீண்டகாலமாக முடிவுறுத்தப்படாமை தேடியறியப்பட்டு அது தொடர்பாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு பதிவுசெய்தல் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்த புலனாய்வுகளின் எண்ணிக்கை 1571 ஆக காணப்பட்டது. | | |
| (ii) | சுங்கத்தின் வெவ்வேறு பிரிவினால் புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு சுங்க மத்திய புலனாய்வு பதிவுசெய்யும் அமைப்பு நாளதுவரையாக்கப்படுவதற்கு மத்திய புலனாய்வு பிரிவிற்கு அறிக்கையிடப்பட்டிருந்த 1285 புலனாய்வுகளுக்கு கணக்காய்வு திகதியான 2020 செப்தெம்பர் 22 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 70 சதவீதமான அதாவது 903 புலனாய்வுகளுக்காக செலவிடப்பட்டிருந்த காலம் 03 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையாக காணப்பட்டது. 17672 புலனாய்வுகள், புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருப்பினும் அதில் 9573 புலனாய்வுகள், அதாவது 54 சதவீதம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காது முடிவுறுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஊதிய தொகுதிக்காக ரூபா 1925 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபர் செலவினம் ரூபா 0.8 மில்லியன் ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட 685 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | (i) அத்தியாவசிய பதவிகளுக்காக குறித்த அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு செய்தல்<br>(ii) தேவையற்ற பதவிகள் திறைச்சேரியுடன் கலந்துரையாடி நீக்கப்படுதல்<br>**(iii)** தற்போது இலங்கை சுங்கத்தினால் அசாதாரணமாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற மேலதிக கொடுப்பனவு கட்டுப்படுத்தி வேலையற்ற நபர்களுக்காக சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தல். |